உ

**பாலு சரவண சர்மா** - புரோகிதர் - ஜோதிடர் - பஞ்சாங்க கணிதர்

எண் 9, 4வது தெரு, கல்யாண நகர், மேற்கு தாம்பரம், சென்னை45, கைபேசி: 98403 69677 www.prohithar.com


# பந்தக்கால் பூஜை பொருள் பட்டியல் மற்றும் முன்னேற்பாடு

## பூஜைப்பொருட்கள்

| | |
|---|---|
| தரமான மஞ்சள் தூள் 100கிராம் | |
| தரமான குங்குமம் | 50 கிராம் |
| மஞ்சள்கொம்பு | 100 கிராம் |
| குண்டு மஞ்சள் | 100 கிராம் |
| விபூதி பொட்டலம் | 1 |
| நாம சூர்னம் | |
| பன்னீர் புட்டி | 100 மிலி |
| சந்தனம் | 20 கிராம் |
| நவரத்தினம் | |
| பஞ்சலோகம் | |
| நவதான்யம் | 250 கிராம் |
| கற்பூரம் | 50 கிராம் |
| தரமான ஊபத்தி | 1 பாக்கெட் |
| திரிநூல் | 3 கட்டு |
| பஞ்சு நூல்கண்டு பெரியது 1 | |
| இதயம் நல்எண்ணைய் 500 மிலி | |
| பூநூல் | 1 |
| வெற்றிலை | 50 |
| பாக்கு | 100 கிராம் |
| சுண்ணாம்பு | 1 டப்பா |
| தீப்பெட்டி | 2 |
| வெல்லம் | 100 கிராம் |
| டைமன்ட் கற்கண்டு | 50 கிராம் |
| கொட்டப்பாக்கு | 9 |
| பாக்கு தொன்னை | 1 டஜன் |
| சிறிய கத்தி | 1 |
| தர்பை புல் | 3 கட்டு |
| நலுங்குப்பொடி | 10 கிராம் |
| RKG நெய் | 100 கிராம் |
| டிஷ்யூ பேப்பர் | 1 பாக்கெட் |
| டீகப் | 25 |
| சணல் கயிறு | ஒரு கண்டு |
| மண் அகல் | 2 |

## பந்தக்கால்

மூங்கில் 9 அடி -1

**மாவிலை கொத்து 21**

(நன்கு கழுவியது)

**பசும்பால் & தயிர் 100 மிலி**

## இதரப்பொருட்கள்

| | |
|---|---|
| உரித்த தேங்காய் | 3 |
| தரமான பச்சரிசி | 1 கிலோ |
| துவரம் பருப்பு | 500 கிராம் |
| வாழைப்பழம் | 24 |
| வாழை இலை | 5 |
| எலுமிச்சை | 5 |

## துணி வகையறா

சிவப்பு **பருத்தி** ரவிக்கை துணி

(பாலியஸ்டர் தவிற்கவும்) 1மீ

## சில்லரை காசுகள்

| | |
|---|---|
| 5 ருபாய் காசு | 21 |
| 100 ரூபாய் | 2 |

## பூ வகையறா

அருகன் புல்

பூச்சரம் 15முழம்

உதிரிப்பூக்கள்



## -: வீட்டிலிருந்து :-

காமாக்ஷி தீபம் + தட்டு

குத்துவிளக்கு ஜோடி

பித்தளை கலச சொம்பு 2

குங்குமபரணி

சந்தன கிண்ணம்

பன்னீர் சொம்பு

பித்தளை தட்டு

சிறிய கிண்ணம் (எவர்சில்வர்) 5

சிறிய பேசின் 2

பஞ்ச பாத்திரம்+ உத்ரணி

மணி, தீபகலசம், தட்டு

காவி, கோலமாவு

நெல்படி (அளவை) நெல் நிரப்பி வைக்கவும்

கல்யாண மணை

மணை மேல் விரிக்க பழைய வேஷ்டி துணி

கத்திரிக்கோல்

கையாள பழையதுணி

பழைய செய்தித்தாள்

ஆலம் (ஆரத்தி) நீர்

முக்காலி (நலுங்கு வைக்க)

உரல்-உலக்கை (நெல் குத்துதல்)

பெரிய அன்னக்கூடை

(பந்தக்கால் அபிஷேகம்/பசுதீவனம் )

மணல் மூட்டை(பந்தக்கால் நிறுத்த)

முளைப்பாலிகை

(நவதான்யம் விதைத்தல்)

www.prohithar.com

---

**♥ பந்தக்கால்**

திருமணத்திற்கு முன்னர் ஒற்றைப்படையில் 3, 5, 7, 9 ஆம் நாளில் துவக்கப்படும் திருமண சடங்காகும். இந்தநாள் முதல் திருமண வீடு எனும் இலக்கணத்திற்கு வீடு உட்படும்.

பந்தக்கால் கோவிலில் நடைபெறும் கொடியேற்றத்திற்கு இணையான புனிதமான சடங்கு

பந்தக்கால் ஊன்ற தேய்பிறை வளர்பிறை எனும் விஷயம் பொருந்தாது. ஆயினும் அமாவாசை, பிரதமை, தேய்பிறை அஷ்டமி, தேய்பிறை நவமி, சந்திராஷ்ட நக்ஷத்திரம் பொருந்தாது.

வளர்பிறை அஷ்டமி, நவமி மத்திமம். மாலை நேர சுபவேளையிலும் பந்தக்கால் நடலாம்



**♥ பந்தக்கால் கழி**

பந்தக்கால் கழி பச்சை மூங்கில் 9 கணு கொண்டதாகும். சுமார் 9 அடிக்கு இருக்கும்

2அங்குல தடிமன் இருத்தல் வேண்டும் ✱காய்ந்த மூங்கில் தவிற்கவும்

**♥ கொடியேற்றம் (துவஜாரோகணம்):**

பந்தக்காலில் கொடியேற்றம் என்பது சிவப்பு அல்லது மஞ்சள் ரவிக்கை துணிகட்டுவதாகும்.

திருமணத்திற்கு பின்னர் பந்தக்காலில் கட்டிய சிவப்பு துணையை பூஜை அறைக்கு பயன்படுத்தவும்

**♥ வாசல்கோலம்:** தலைவாசல் மற்றும் வீட்டுவாசலில் 8 இதழ் தாமரை கோலம் போடவேண்டும். காவியை பயன்படுத்தியும் வண்ணக்கோலம் இடவேண்டும்

**♥ நலுங்கு**

நலுங்கு பந்தக்கால் அன்று காலையில் துவங்கி ஒற்றப்படையில் திருமணம் அன்று காலையில் முடியவேண்டும். தேவைப்படின் மாலையிலும் நலுங்கு வைக்கப்படும்

**♥ எண்ணை நலங்கு**

காலையில் <u>முதலில்</u> வைக்கப்படும் நலுங்கு நல்லெண்ணெய், நலுங்குப்பொடி கொண்டுதான் வைக்கப்படவேண்டும். சூரிய உதயத்திற்கு முன் பின் ஒரு மணி நேரத்தில் வைப்பதுதான் உஷா கால நலுங்கு (அதிகாலை 5 மணி முதல் 7 மணி முன்னர்)

**♥ சந்தன நலுங்கு**

காலையில் எண்ணை நலுங்குக்கு பின்னர் வைக்கப்படுவது சந்தனம் நலுங்கு. இதில் தலை தவிற்த்து முகம், கை, கால் பாதங்களில் மட்டும் வைக்கப்படும். சந்தன நலுங்கு எந்த வேளையிலும் வைக்கலாம். ✱ கால் பாதங்களில் மஞ்சள்+சுன்னாம்பு கலந்து பாத (சிவப்பு) நலுங்கு வைப்பார்கள்

**♥ <u>மருதானி:</u>** திருமண மங்கல நிகழ்வுகளில் ஒன்றான மணப்பெண்ணிற்கு பந்தக்கால் அன்று மருதானி இலை அரைத்து கைகளில் மருதானி வைக்கப்படும்

**♥ நலுங்குப்பொடி:**

நலுங்குப்பொடி என்பது இயற்கையான அரைத்த பச்சைப்பயிர், சீயக்காய் தூள் கலவையாகும். மற்றப்படி இரசாயனம் கலந்த ஷாம்பு பொருட்கள் கொண்டு நலுங்கு வைக்கக்கூடாது

**♥மாவிலை தோரணம்** பந்தக்கால் நட்டவுடன் வெளிவாசலில் **மாவிலை, வேப்பிலை** கொத்துக்களாலும் தென்னங்குறுத்து கலந்தும் தோரண பந்தல் கட்டவேண்டும்



**♥ வாழைமரம் - முகப்பு பதாகை - வாழைப்பந்தல்**

✱ வாழைமரம் வாடாமல் இருக்க திருமணத்திற்கு 3 நாட்கள் முன்னர் வாழைமரம் கட்டவேண்டும்

✱ பந்தக்கால் 5, 7, 9 நாட்களில் நடந்தாலும் வாழைமரம் 3ஆம் நாள்தான் கட்டவேண்டும்

✱ பூ - குலை தள்ளிய மரம் கட்டுதல் நன்று

✱ முகப்பு பதாகை(பாரத கொடி தட்டி), மின்அலங்கார விளக்குகள் அனைத்தும் திருமணத்திற்கு 3நாட்கள் முன்னர் வாசலில் கட்டவேண்டும்.

**மங்கல பொருட்கள்**

திருமணம் முடியும் வரை மங்களகரமான பொருட்களை அதிகமாக வாங்கி வைத்திருக்கவும்

❖மஞ்சள் தூள் ❖குங்குமம் ❖சந்தனம் ❖விரலி மஞ்சள் ❖பூசுமஞ்சள் ❖ரவிக்கை துணி
❖வெற்றிலை ❖பாக்கு ❖பூச்சரம் ❖வாழைப்பழம் ❖ பன்னீர் ❖சுமங்கலிசெட் ❖சில்லரை



**பெண்கள்:** பந்தக்கால் நடுவதற்கு 5 பெண்கள் தேவை

**பந்தக்கால் நடும் திசை :** ஈசான்யம் (வடகிழக்கு) , கிழக்கு, நிருதி (தென் மேற்கு) திசை நன்று

**பந்தக்கால் இடம்**

சில வீடுகளில் கால் நடுவதற்கு குழிதோண்ட வசதி இருக்காது அதுபோன்ற சூழலில் மண் அல்லது மணல் மூட்டையில் கொம்பை நிறுத்த ஏற்பாடு செய்யவேண்டும் இதற்கு மணல், சாக்கு கோணி தேவைப்படும்

குழி தோண்ட வசதி இருப்பின் 2 அடி ஆழத்திற்கு குழி எடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் (கடப்பாரை தேவை)

**சுமங்கலிபூஜை - முன்னோர் வழிபாடு (பேரண்டாலு)**

திருமணத்திற்கு முன்னர் வெள்ளிக்கிழமையில் சுமங்கலி பூஜை செய்யவேண்டும்
திருமண துணிகள் , திருமாங்கல்யம் வைத்து முன்னோர்களுக்கு வழிபாடு செய்யவேண்டும்

**பசுவிற்கு தானம்**

பந்தக்கால் துவங்கி திருமணம் வரை இல்லத்தில் பசுவிற்கு கோதுமை தவிடு + வெல்லம் கலந்து தானம் செய்யவேண்டும்.

**நெல் குத்துதல் - ( வட்லு தஞ்சுலு)**

பந்தக்கால் நட்டவுடன் உரலில் நெல் போட்டு பெண்கள் ஒரு சேர்ந்து மரஉலக்கையால் குத்தி அரிசி எடுத்து அந்த அரிசியைத்தான் குலதெய்வத்திற்கு பொங்கல் செய்து படைப்பார்கள் (திருமணத்திலும் 5 இலை படையல் போட்டு படைக்கப்படும் அரிசியும் இதுதான்)

மரபு மாறாமல் இன்றும் நெல்குத்துதல் திருமண வீட்டில் கடைபிடிக்கப்படுகிறது. இதற்கு உரல், உலக்கை, குந்தாணி (நெல் சிந்தாமல் இருக்கும் வளையம்) தேவை

**முளைப்பாரி - அங்குரார்ப்பணம்**

✸200 கிராம் நவதான்யம்
✸திருமணத்திற்கு 3 நாட்கள் முன்னர் முளைப்பாலிகை தயார் செய்யவேண்டும்
✸நவதான்யங்களை ஒரு மணி நேரம் ஊறவைக்கவேண்டும்
✸ஊறவைத்த நவதான்யத்தை பருத்தி துணியில் கட்டி மண் பானையில் வைக்கவேண்டும்
✸நவதான்ய முளை பானையை திருமண மண்டபத்திற்கு கொண்டுசெல்லவும்
✸மணமேடையில் முளைப்பாரி வைக்கும் 5 பாலிகைகளில் உள்ள ஓட்டையில் வெற்றிலை வைத்து அதன்மேல் முளைவிட்ட நவதான்யத்தை வைக்கவும்



**மஞ்சள் அரைத்தல்**



திருமணத்தில் பயன்படுத்தப்படும் தேங்காய், திருமாங்கல்ய கயிறு ஆகிவற்றிற்கு அரைத்த மஞ்சளைத்தான் பூசவேண்டும்.

மஞ்சள் அரைத்தல் எனும் சடங்கும் பந்தக்கால் அன்றுதான் செய்யவேண்டும். மஞ்சள் அரைத்தல் நிகழ்ச்சியை அத்தை, மாமி கொண்டு துவக்கவேண்டும்.

அரைத்த மஞ்சளை அரை கைப்பிடி எடுத்து பிள்ளையார் பிடித்து பூஜை அறையில் வைக்கவேண்டும். திருமணம் முடிந்த பின்னர் நீர்நிலையில் கரைக்கவேண்டும்

**கூரைப்புடவை மஞ்சள் பூசுதல்:**

திருமணத்தில் முகூர்த்தகாலத்தில் உடுத்தும் கூரைப்புடவைக்கு மஞ்சள்பூசுவதும் பந்தக்கால் அன்றுதான்.

அரைத்த மஞ்சளை வாளி நீரில் கரைத்து அதில் முகூர்த்த துணிகளை (புடவை, ரவிக்கை, வேஷ்டி, துண்டு) நன்கு ஊறவைத்து துணியில் மஞ்சள்நிறம் படிந்த பின்னர் காயவைக்கவும், காய்ந்த துணியை மடித்து பூஜை அறையில் வைக்கவேண்டும்.



**திருமண வீட்டில் இருக்கவேண்டிய அரவைகல்கள் - மற்றும் விவசாய கருவிகள்**

- அம்மி - குழவி
- மாவு எந்திரம்
- உரல் - உலக்கை, குந்தாணி (கல் அல்லது மரம்)
- ஆட்டுக்கல்
- இடி கல்
- வெட்டுக்கத்தி , அரிவாள் , கடப்பாரை, மண்வெட்டி

**மூங்கில் முறம், மூங்கில் சொலவு, நெல் படி** இவைகளுக்கும் மஞ்சள் குங்குமம் வைக்கவேண்டும்

**அரைத்த/இழைத்த சந்தனம்**



திருமணம் என்றாலே அரைத்த சந்தனம்தான் மிக முக்கியமான நறுமண உபசார பொருளாகும், வரவேற்பிலும் நலுங்கிலும் அரைத்த சந்தனம் பயன்படுத்துங்கள். திருமண வீட்டில் பயன்படுத்த மிகவும் தரமான சந்தன தூளை வாங்கவும் அல்லது சந்தன கட்டை + அரவை கல் வாங்கவும். கடைகளில் 100% போலி சந்தனதூள்தான் விற்க்கப்படுகிறது. எனவே கீழே குறிப்பிட்ட கடைகளில் மட்டும் சந்தனதூள் அல்லது கட்டை வாங்கவும்

1. *அண்ணாசாலை (ரிச்சி தெரு அண்ணா சிலை அருகில்) உள்ள காதிகிராப்ட்*
2. *எல் ஐ சி எதிரில் உள்ள அரசின் பூம்புகார்(தமிழக அரசு) கடை*

✸ தாய்மாமன்தான் சந்தனக்கட்டையை பன்னீர் விட்டு இழைத்து மணமகள் (மணமகனுக்கு) முதலில் பூசவேண்டும்.

**கூழ்வார்த்தல்/அன்னதானம்: (நாந்தி)**

திருமணத்திற்கு சிலநாட்கள் முன்னர் உறவு - நட்பு - அருகாமைவாசிகளை அழைத்து குலதெய்வத்திற்கு கூழ்வார்த்தல் சடங்கு செய்யவேண்டும் அன்று பொது அன்னதானம் செய்யவேண்டும். (தான தர்மங்கள் செய்து சுபம் துவக்கவேண்டும்)

**பந்தக்கால் நட்ட பின்னர்**

மணமக்கள் பொழுது சாய்ந்த பின்னர் வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது
திருமணம் முடிந்து மணமக்கள் வீடு திரும்பும் வரை வீட்டைத்தவிற வேறு எங்கும் உணவு உண்பது கூடாது.
வீட்டு வாசலில் இரு வேளையிலும் தீபம் ஏற்றவேண்டும். இல்லத்தில் பக்தி பாடல்கள் மட்டுமே ஒலிக்க வேண்டும்.

**தாழ்மையான வேண்டுகோள்**



திருமண வீட்டிற்கு வருகை தரும் பெண்களை மனம் புண்படும்படி சுமங்கலி - விதவை என்று பாகுபாடு காட்டாதீர்கள். அனைவரும் நம்மை வாழ்த்தவே வருகை தருகிறார்கள்.

நன்கு வாழ்ந்து பேரன்-பேத்தி எடுத்த முதியவர்களை - மூத்தவர்களை விதவை என்பதற்காக திருமண சடங்குகளில் ஒதுக்கி அவர்களை மனம் வேதனை அடைய செய்யாதீர்கள். சூழலை மிகவும் பக்குவமாக கையாளுங்கள். *தர்ம சாஸ்திரம் பெண்கள் அனைவரையும் தாய்மைநிலையில்தான் பாவிக்கிறது.*

**குறிப்பு:** மேற்குறிப்பபிட்ட சம்பிரதாயங்கள் பொதுவானவை, சிலருக்கு சம்பிரதாயங்களில் மாறுதல் அடைந்து இருக்கும்.










**சுபம்**

---



**புரோகிதர் தட்சனை ரூ. 3000/-**

Balu Saravana Sarma, Progithar, Tambaram, Chennai 45. 9840369677 www.prohithar.com

**திருமணம் குறித்த விரிவான விளக்கம் அறிய கீழ்கண்ட இணையபக்கத்தை பார்வை இடவும்**

http://www.prohithar.com/thirumanam.html

*திருத்தம்* 9.1.2026